Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# *Appavuku*… Kavithai Thogupu in Feminist Perspective

**V. Merlin Christina**, Registration No:23113154022012, Ph.D Research Scholar (Full-time), Department of Tamil, S.T. Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
**ORCiD: https://orcid.org/0009-0002-0493-2596**
**Dr. B. Malar**, Research Guide, Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
**ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734**
**DOI: 10.5281/zenodo.14752582**

## Abstract

*There are many ideas about women have been found in Sangam literature up to modern literature. Feminist ideas became widespread during Bharathiyar's time. Although the poet Malar points out the impact of his father's separation in the collection of poems by the contemporary writer Dr. P. Malar's "Apavukku" (To His Father), there are collections of poems with feminist ideas in them. The purpose of this article is to examine the feminist ideas in this collection of poems. Even in the twenty-first century, there is an environment in society where women are somehow subjected to slavery and oppression and live their lives within a narrow circle in their homes. P. Malar who works as an assistant professor at Thenthiruthangur Hindu College in Nagercoil, has published her first collection of poems 'Appavukku…'. Her collection of poems 'Appavukku…' highlights the lifestyle of women and the long way they have to go. She raises the alarm that those who are paralyzed inside the house are not women. Not only that, she records the idea that women should rule this world in her collection of poems.*

**Keywords:** Penniyam, Kuzhanthai Thirumanam, Dowry, Widow, Appavukku.

## References

[1] Malar, B. *Appavuku*. John Publication, Nagercoil. 2019
[2] Mariya Stephen. A. *Pennurimai Pathukappu*. Manitha Urimai Chattainkal Kalvi Veliedu
[3] Meyyappan. S, (P.A). *Bharathiyar Kavithaigal*. Manivasagar Pathippagam, Pari Munai, Chennai -18.1997
[4] Rangammal, R. *Pennium Anukumuraikalum.* Arivu Pathipakam, Ilakiya Kotpadukal.
[5] Vennila, A. *Neeril Alaiyum Mugam*. Agazhi Velieedu. Vandavasi, Chennai. 2008.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# பெண்ணிய நோக்கில் *அப்பாவுக்கு…* கவிதை தொகுப்பு

**வி. மெர்லின் கிறிஸ்டினா,** பதிவுஎண்: 23113154022012, தமிழ் முனைவர்பட்ட ஆய்வாளர், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-0493-2596
**முனைவர் பா. மலர்,** உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0804-1734
**DOI: 10.5281/zenodo.14752582**

**ஆய்வுச்சுருக்கம்**

*இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் ஏதோ ஒருவகையில் பெண்கள் அடிமைத்தனத்திற்கும், ஒடுக்குதலுக்கும் உட்பட்டு ஒரு குறுகிய வட்டத்திற்குள் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும் சூழல் சமுதாயத்தில் காணப்படுகின்றது. நாகர்கோவில் தென்திருதாங்கூர் இந்துக்கல்லூரியின் உதவிபேராசிரியராக பணியாற்றும் 'பா. மலர்' அவர்களின் முதல் கவிதை தொகுப்பு 'அப்பாவுக்கு…'. இவரின் இக்கவிதை தொகுப்பு பெண்களின் வாழ்வியல் முறையை சுட்டுவதோடு அவர்கள் செல்ல வேண்டிய தூரம் அதிகம், வீட்டுக்குள் முடங்கி கிடப்பவர்கள் பெண்கள் அல்ல என தட்டி எழுப்புகிறார். மட்டுமல்ல பெண்கள் இவ்வையகத்தை ஆள வேண்டியவர்கள் என்னும் கருத்துக்களை தன் கவிதை தொகுப்பில் பதிவு செய்கிறார்.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணியம், குழந்தை திருமணம், வரதட்சணை, விதவை, அப்பாவுக்கு.

**முன்னுரை**

சங்க இலக்கியம் துவங்கிதற்கால இலக்கியம் வரையில் பெண்களைப் பற்றிய கருத்துக்கள் காணப்பட்டாலும், பாரதியார் காலத்திற்கு பெண்ணிய கருத்தாக்கங்கள் பரவலாயின. சமகால எழுத்தாளரான முனைவர். பா. மலரின் அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் அப்பாவுடைய பிரிவினையின் தாக்கத்தை கவிஞர் சுட்டி இருந்தாலும், பெண்ணிய கருத்துடைய கவிதை தொகுப்புகள் இதில் இடம் பெற்றுள்ளன. இக்கவிதை தொகுப்பின் பெண்ணிய கருத்தாக்கங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பதன் ஆங்கில பதம் **'Feminism'** ஆகும். பெண்ணியம் என்பதை **'பெண்ணிலைவாதம்', 'பெண்நிலைஏற்பு', 'மகளிரியல்', 'பெண்ணலக்கொள்கை'** என்ற வேறுபெயர்களைக் கொண்டது. **'Feminism'** என்ற சொல் **'Femina'**என்ற இலத்தின் சொல்லின் திரிபு. துவக்கக் காலத்தில் பெண்ணியம் என்ற சொல் பாலியல் பண்புகளைக் குறிக்க

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பயன்பட்டது. பிற்காலங்களில் பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்கு இச்சொல்லை கையாண்டனர்.

**அறிஞர்களின்கருத்துக்கள்:**

**'சார்லட்பன்'** என்று அறிஞர் "**பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளை பெற்று தருவது மட்டுமல்ல சமூகத்தை மாற்றி அமைக்க முயல்வதாகும். 'கார்டன்'**" என்று அறிஞர் **"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்கிறார்."**

**குழந்தைத் திருமணம்**

குழந்தைதிருமணம் என்னும் பெருங்கேடு நம் சமூகத்தில் இன்றளவும் இருப்பதை காணமுடிகிறது. கல்வி கற்கும் வயதில் பெண் குழந்தைகள் குடும்பபாரம் சுமக்க தொடங்குகிறார்கள். இதனை,அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் வரும் **'நீர்குமிழிகள்'**என்ற கவிதையில்,

**புத்தகம்தூக்கும்
பருவத்தில்
குழந்தைதூக்கும்
நிர்பந்தத்தால்
நங்கையே
உடைந்துபோகிறாய்
நீர்க்குமிழியாய் (நீர்குமிழிகள்.ப. 55)**

நீரில் உள்ள நீர் குமிழிகள் ஒரு சில நிமிடங்களில் குறைந்து போகும். இவைப் போல் புத்தகம் தூக்கி சாதனைகள் நிகழ்த்த வேண்டிய வயதுடைய குழந்தைகள் அது மறுத்து ஒரு குழந்தை வேறொரு குழந்தை சுமப்பதை வருத்தத்துடன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். **"நல்ல வினை கொண்டு நாயை விற்பாரந்த / நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?" (பாரதியார் கவிதைகள். பெண் விடுதலைக் கும்மி. 4)** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கான திருமண வயது பதினெட்டு என வரையறை செய்தாலும், இன்றளவும் ஏதோ ஒரு ஒடுக்குதலுக்கு உட்பட்டு குழந்தை பருவத்திலேயே திருமணம் செய்யும் முறை வளர்ந்து வரும் நிலை தற்கால இயந்திர உலகிலும் காணப்படுகின்றது.

**வரதட்சணை**

வரதட்சணை என்ற சொல் **'ஸ்த்ரிதனம்', 'சீர்'** ஆகிய பெயர்களிலும் ஆங்கிலத்தில் **'Dowry'** என்ற பெயரிலும் சுட்டப்படுகின்றது. துவக்ககாலம் தாய்வழியை சார்ந்த சமூகமாக காணப்பட்டது. இக்காலத்தில் ஆண்வீட்டார் ஒரு பெண்ணை மணம் முடிக்க அவளுக்குரிய பரிசு பொருட்களை பெண்வீட்டாரிடம் கொடுத்து திருமணம் செய்யும் முறை வழக்கிலிருந்து. எப்போது பெண்ணுக்கு ஓய்வு தேவைப்பட்டதோ, அப்போது முதல் அவள் அடிமையாகது

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வங்கினார் பிற்காலங்களில் பெண் வீட்டாரை ஆண்விட்டாருக்கு சீர் என்ற பெயரில் கட்டாய வரதட்சனை கொடுக்கும் நிலை சமுதாயத்தில் காணப்படுகிறது. வரதட்சணை சரியாக தராததால் ஒரு பெண் மற்றொரு பெண்ணை வன்கொடுமை செய்யும் சூழல் சமுதாயத்தில் உள்ளது. இதனை தடுக்க அரசு 1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடை சட்டம் ஏற்றி சமூதாயத்தில் நடைமுறைப்படுத்தினர். 1961 பிரிவு நான்கின் படி மணமகளின் வீட்டிலிருந்து நேரடியாகவோ மறைமுறைமுகமாகவோ மணமகனின் பெற்றோர், உறவினர் வரதட்சனை கேட்பாராயின் அவர்களுக்கு ஆறுமாதம் முதல் இரண்டு வருடம் வரை சிறை தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் அல்லது சீர்பொருட்களுக்கு ஏற்றவாறு தண்டனை விதிக்கலாம். உதவும் கரங்கள் என்ற கவிதையில்,

**தட்சணையின்றி**
**தாலினைநீகட்டினால்**
**தாயும்கூட**
**தலைமுழுகிவிடுவாள்-என்**
**தலையன்இவன்**
**இல்லையென்று, (உதவும் கரங்கள்.ப.43 )**

என்ற கவிதை வரிகள் வாயிலாக ஒரு பெண் தான் மற்ற பெண்ணிடம் வரதட்சணை கேட்கிறார்கள் என ஆசிரியர்சுட்டுகிறார்.

**இருபதுஆண்டுகள்**
**இறந்தபின்னே**
**இலட்சங்களை கையில்**
**கொண்டு உன்**
**இனிய மகளுக்கு**
**இலட்சிய மாப்பிள்ளை**
**தேடுகையில்**
**இலட்சங்கள் கோடிகளாய் மாறி**
**கைகொட்டி சிரிக்கும்." (இலட்சங்கள் கோடிகளாய். ப. 74)**

என்னும் கவிதை அடியில் ஆசிரியர் பா.மலர் இன்று நீங்கள் வாங்கும் வரதட்சணையை நாளை பல மடங்காக திரும்ப கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள இளைஞர்களை அறிவுறுத்துகிறார்.

**அடிமை வாழ்க்கை**

தன்னுரிமை இழந்து பிறருக்கு வேலை செய்வார்கள் அடிமைகள். பெண்கள் தன் கணவர் மற்றும் பிள்ளைகளுக்காக அவள் விருப்பம் எது வென்று அறியாமல் விரும்பாத காரியம் செய்தும் தன்னை கட்டுப்படுத்தி வாழும் நிலை உலகில் காணப்படுகின்றது.

இதனையும் தொல்லை என்று நினையாமல் கடமை என கடக்கும் பெண்கள் அநேகர், அப்பாவுக்கு கவிதை தொகுப்பில் மறந்த கவிதையில்,

**கிரைண்டரில் அரைப்படும்**
**மாவுக்கும்**
**படிப்பரைக்கும் இடையில்**
**களைந்து போகிறது**
**என் கவிதைகள்**
**மறந்த கனவாக… (மறந்த கவிதை. ப. 98)**

இந்த கவிதையின் வாயிலாக ஆசிரியர் இந்த அடிமை வாழ்க்கையில் கிரைண்டரின் அரிசி எப்படி அரைப்படுகின்றதோ அவ்வாறு என் கவிதை காகிதத்தில் எழுத முடியாமல் கனவாக போகிறது என்கிறார். **பெண்கள் தினம்** என்ற கவிதையில் இந்த அடிமை வாழ்க்கை வாழும் பெண்களைப் பற்றி ஆசிரியர்,

**வந்தது மார்ச் 8**
**மங்கையர் தினம்**
**மகிழ்ச்சிதான் மங்கையருக்கு**
**மறந்துவிட்டார்கள் நம்மை**
**ஆண்டுக்கு ஒரு நாளாவது**
**நினைக்கின்றார்கள் என்று**
**உன்னை மறந்தது**
**உலக மட்டு மல்ல**
**பெண்ணே நீயும் தான். (பெண்கள் தினம். ப.99)**

ஆகிய அடியின் வாயிலாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவராய் அடிமை வாழ்வு செய்யும் பெண்கள் மார்ச் எட்டாம் தேதியானது உலகம் நினைக்கட்டும் என தன் ஆதங்கத்தை பதிவு செய்கிறார். அதோடு தன் நலனையே மறந்து வாழும் பெண்ணை சுட்டுகிறார்.

**பெண் உளவியல்**

தந்தை வழி சமூகத்தை சித்தரிக்கும் ஆசிரியர் அவரது அப்பாவை பிரிந்த மனநிலையை அறியமுடிகிறது. வரதட்சணை, குழந்தை திருமணம், குழந்தைபேறு, அடிமை வாழ்க்கை இந்த பிரச்சனைகளை எடுத்துரைக்கும் ஆசிரியர் பா.மலர் இவற்றிற்கான தீர்வை வாசகரின் கரங்களில் கொடுக்கிறார். இக்கவிதை தொகுப்பில் ஆசிரியர் சில நகைச்சுவைகளை கையாளுகிறார், அதுவும் பெண்ணை மையப்படுத்தி அமைவதைக் காண முடிகிறது.

**வளர்ப்பு மகளாம்**
**வானப் பெண்ணிற்கு**
**வரலாறு காண ஊழலில்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**வந்த பணத்தில்**

**வாங்கப் பெற்ற**

**வைரங்கள் இவை! (நட்சத்திரங்கள். ப. 98)**

**அடுப்படையிலே வெந்தாலும்**

**விதிக்கப்பட்ட வர மென்னவோ**

**ஆறிய தோசை. (தோசை. ப. 96)**

ஆகிய கவிதை அடிகள் வாயிலாக பெண்ணியத்தை பேசும் பா.மலர் சில நேரங்களில் நகைச்சுவை வழியாக வாசகர்களே சிந்திக்கவைக்கிறார். வீட்டில் உள்ள அனைவரும் சூடான தோசை தோசையை கொடுக்கும் பெண் இறுதியில் அவளுக்கு மிஞ்சுவது அறிப்போன தோசை, அது மட்டுமில்ல தோசை எப்படி ஆறிப்போனதோ அதேபோல் தான் வேலைகளை செய்து உடலும் சோர்ந்த நிலைக்கு செல்கிறாள். இந்த உளவியலை நகைச்சுவையாக பதிவு செய்கிறார். பா.மலரின் அப்பாவுக்கு கவிதை தொகுப்பு முழுக்க முழுக்க பெண் உளவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தி உள்ளது.

**விதவை**

ஒரு ஆண், பெண் இருவருக்கும் திருமணமாகி ஒரு சில நாட்களில் கணவன் இறந்தால் அந்த பெண்ணிற்கு சுட்டும் பெயர் விதவை. ஒருவேளை கணவன் இறப்பதற்கு பதிலாக மனைவி இருந்தால் அந்த ஆணிற்கு சமூகம் எந்த பெயரையும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. பெண்கள் தலையில் பூச்சூடும் வழக்கம் உடையவர்கள். சங்க இலக்கியத்தில் ஆண்களும் பூச்சூடி உள்ளன. பூ மற்றும் பொட்டு வைப்பது பெண்களின் உரிமை. ஒரு பெண் தான் பிறந்து குழந்தை பருவம் முதல் பெற்றோரால் பூப்போட்டு வைத்து அழகு பார்க்கப்படுகிறாள். அவளுக்கோ கணவன் இறந்த பிறகு அந்த உரிமை மறுக்கப்படுகிறது என்பதை,

**பூவையும் பொட்டையும் சமூகம்**

**எடுத்துக் கொள்ள**

**விதவை யாக்கி விலங்கு கையில்**

**விமலையே!**

**உடைந்து போகிறாய்**

**நீர்க்குமிழியாய்… (நீர்க்குமிழிகள். ப.55)**

என்கிற நீர் குமிழிகள் கவிதை அடிகள் வாயிலாக ஆசிரியர் பா. மலர் விதவை என்கிற சொல்லைக் கண்டித்தும். பூவும், பொட்டும் பெண்களுக்கு எக்காலத்துக்கும் உரியன என்று உலகிற்கு பறைச்சாற்றுகிறார்.

**குழந்தைப் பேறு:**

இந்த சமுதாயத்தில் குழந்தை இல்லாமல் ஒரு பெண் இருந்தால் அவளுக்கு கிடைக்கும் பெயர் **'மலடி'** என்பதே. புதிதாக திருமணமாகும் ஆண், பெண்கள் ஒரு சில நாட்களில்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கருத்தரிக்க வேண்டும் என சமுதாயம் ஒரு பிம்பத்தை உருவாக்கியுள்ளது. இதனை மறைமுகமாக வட்டாரச் சொல்லாடலில் **'விசேஷம் இருக்கிறதா'** என கேட்கும் வழக்கம் காணப்படுகிறது .இருபத்தொன்றாம் நூற்றாண்டில் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் காணப்பட்டாலும் சிகிச்சை முறையில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் சொல்லி முடியாதவை. **'அச்சுப்பிழை'** என்ற கவிதையில் நாப்பத்தெட்டு வயதான பெண்ணிற்கு நீண்ட நாட்களாய் குழந்தை இல்லாத ஏக்கத்தை நளிதழில் வெளிவந்த எட்டாம் வகுப்பு மாணவிக்கு பிறந்த எட்டு குழந்தைகளின் கதையை வாசித்து வெளிப்படுத்துகிறார். இதனை,

**தொட்டில் பொம்மை முதல்**
**தாலாட்டு பாட்டு வரையிலும்**
**தயாராகலாம் ஆனால் குழந்தை? (அச்சுப்பிழை. ப.54)**

என்ற கவிதை அடிகளின் வாயிலாக அறிய முடிகிறது. குழந்தை பேறு கடவுள் தரும் அருட்கொடை எந்த மனிதனுக்கு எப்போது தேவை என்பதை அறிந்து இறைவன் கொடுப்பார் மனிதன் பிறமனிதனை பேசுவது வன்முறையான செயல்தான் என ஆசிரியர் தெளிவாக இவ்வையகத்திற்கு உரைக்கிறார்.

**குழந்தை வன்கொடுமை:**

குழந்தை என்று சொன்னால் அனைவருக்கும் பிடிக்கும். அவர்களின் சிரிப்பில் இருக்கும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை இல்லை. இத்தகைய குழந்தைகள் மனித குணம் அற்ற தீய கயவர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும். குழந்தைகளை ஆசிரியர் பா.மலர்,

**களங்கமில்லா கண்மணிகள்**
**காமவெறியர்களின்**
**விரக தாபத்திற்கு விலையாக**
**மலரும் முன்பே**
**கருகும் மொட்டுக்கள். (பெண்கள் தினம். ப.108)**

என்னும் கவிதை அடிகளின் வாயிலாக இக்குழந்தைகள் மலரும் முன்பே கருகும் மொட்டுக்கள் என தன் கருத்தை சமுதாயத்திற்கு பதிவு செய்கிறார்.

**திருமணம்**

பத்துப் பொருத்தம் பார்த்து, நாள், கிழமை, நேரம் குறித்து பெண் பார்க்கும் நிகழ்வு, அயனிச்சோறு, திருமணத்திற்கு பின் உள்ள விருந்து வரையிலும் அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படித் தான் நடக்கும் திருமண விருந்துகளில் சில முறுமுறுப்புகளும் சண்டைகளும் மனக்கசப்புகளும் இருக்கும் இதனை,

**பத்தும் பார்த்து**
**பரிசம் போட்டாலும்**
**முட்டல் முறைப்பும்**

**திட்டலும் இல்லா**

**திருமணம் இல்லை**

**தரணியில்.... (எதார்த்தம். ப. 98 )**

என்ற கவிதை அடிகள் வாயிலாக நகைச்சுவையோடு பா.மலர் சுட்டுகிறார்.

**முடிவுரை**

காலங்கள் பல மாறி நவீனம் என்கிற இயந்திர உலகிலும் பெண் பிறரால் அடிமைபட்டும், குழந்தை திருமணம், வரதட்சணையால் ஒடுக்கப்பட்டும், திருமணத்தில் குறைகூறல், பெண்குழந்தைகள் வன்முறைக்கு தள்ளப்படுகின்றனர் ஆகிய பெண்ணிய நிலைகளை ஆசிரியர் பா.மலர் தன் கவிதையை வழியாக கண்டிக்கிறார். பெண்கள் செல்ல வேண்டிய தூரம் அநேகம் என இன்றைய பெண்களைத் தட்டி எழுப்புகிறார்.

**குறிப்புகள்**

[1] மலர், பா, முனைவர். *அப்பாவுக்கு.* ஜான் பப்ளிகேஷன், நாகர்கோவில், 2019.

[2] மரியஸ்டீபன், அ. *பெண்ணுரிமை பாதுகாப்புச் சட்டங்கள்.* மனித உரிமை கல்வி வெளியீடு.

[3] மெய்யப்பன். ச (ப.ஆ). *பாரதியார் கவிதைகள்.* மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை -18.1997

[4] மெய்யப்பன். ச (ப.ஆ). *பாரதிதாசன் கவிதைகள்.* மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை -18.1997

[5] ரெங்கம்மாள், இரா. *பெண்ணியம் அணுகு முறைகளும், இலக்கிய பயன்பாடும்.* அறிவு பதிப்பகம், சென்னை.

[6] வெண்ணிலா, ஆ. *நீரில் அலையும் முகம்.* அகழி வெளியீடு, வந்தவாசி, சென்னை. 2008.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.